*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.செல்வராணி க/பெ. பெரியசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.08.2025.**

துவக்க நேரம் 04.39 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நாங்கள் எங்கள் காட்டை குதவை வைத்து பணம் பெற்றிருந்ததால், எங்களது பக்கத்து காட்டு கிழங்கை டிராக்டரில் ஏற்றிக்கொண்டு எங்கள் நிலத்தின் வழியாக வந்தபொழுது, எனது அண்ணன் ராமராஜ், அவரது மனைவி அமுதா, அவரது மகள் மீனா, அவரது மருமகன் முத்து, எனது அண்ணன் மகன் ஆகியோர்கள் டிராக்டரை வழிமறித்து, கையில் வைத்திருந்த குச்சி, மண்வெட்டி ஆகியவற்றால் என்னை அடிக்கவந்தார்கள்.

2) அப்பொழுது பெரியசாமி, சுமதி, வெங்கட்ராமன் ஆகியோர்கள் சண்டையை தடுக்க வந்தார்கள். தடுக்க வந்த அவர்களையும், முத்து, ராமராஜ் ஆகியோர்கள் அடித்துவிட்டார்கள். அடிபட்ட நாங்கள் நான்குபேரும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். அப்பொழுது எனக்கும், சுமதிக்கும் லேசான அடி என்பதால் எங்களை மருத்துவமனையில் அனுமதிக்கவில்லை. பெரியசாமி, வெங்கட்ராமன் ஆகியோர்கள் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து 2 நாட்கள் கழித்து வந்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.42 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.12 16:58:19 +0530

Judicial Magistrate No.2, Attur.